வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந,க.எண். 4379/ஆ4/2025 நாள் :24.04.2026

பொருள் : பள்ளிக்கல்வி –வேலூர் மாவட்டம் –9ஆம்வகுப்பு மற்றும் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் தேர்ச்சி விவரம் மற்றும் – உடனடித் தேர்வு ஜூன் –2026 – தேர்வுகால அட்டவணை அனுப்புதல் சார்ந்து.

-----

வேலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட அரசு/ அரசு உதவிபெறும் பள்ளிகள்/ ஆதிதிராவிட நலத்துறை/ மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பயிலும் 6,7,8,9 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்களின் தேர்ச்சி விவரங்களை மாணவர்கள் அறியும் வண்ணம் தகவல் பலகையில் ஒட்டியும், குறுஞ்செய்தி(SMS) வழியாக தெரிவிக்க வேண்டும் 9ஆம்வகுப்பு மற்றும் 11ஆம்வகுப்பு மாணவர்களுக்கான உடனடித் தேர்வுகால அட்டவணை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது என்பதை அனைத்துவகை உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் முதல்வர்களுக்கு தெரிவிக்குமாறு அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்(இடைநிலை /தனியார் பள்ளிகள்) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

குறிப்பு: – உடனடித் தேர்வு 2026 தொகுப்பு மதிப்பெண் பதிவேட்டினை தயார்செய்து 9 ஆம் வகுப்பு எனில் மாவட்டக் கல்வி அலுவலகத்தில் (இடைநிலை ) மற்றும் 11ஆம் வகுப்பு எனில் முதன்மைக்கல்வி அலுவலகத்தில் 11.06.2026 அன்று காலை சமர்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு : உடனடித் தேர்வுகால அட்டவணை**

//ஓம். //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

- அனைத்து அரசு/ உதவிபெறும்/ மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்.

நகல்:–

- மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை /தனியார்), வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.
- மாவட்டக் கல்வி அலுவலர்(தொடக்கக்கல்வி )அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பப்படுகிறது.